Oil resources

* 8 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்திற்கென பூமிக்கடியில் உள்ள எண்ணெய் ஊற்றுக்கள் பற்றி ஆராயும் நிபுணர்கள் இருக்கிறார்களா ?

(ஆ) இதுவரை அவர்கள் செய்த ஆராய்ச்சிகளின் முடிவென்ன ?

(இ) இல்லையானால், ஆராய்ச்சி நிபுணர்களை நியமிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir. The Oil and Natural Gas Commission and the Geological Survey of India of the Government of India are in charge of the investigations of oil deposits in all the States in India.

(*b*) & (*c*) The Geophysical Section of the Geological Survey of India is at present carrying out systematic, gravimetric and magnetic surveys in the coastal belt of South Arcot and Tiruchirappalli districts for discovering oil possibilities.

SRI A. VEDARATHNAM : அகில இந்திய சர்விலயில் இருக்கின்றவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள பூகர்ப ஆராய்ச்சியைத் திருப்திகரமாக நடத்துவதற்குப் போதுமானதாக இல்லை என்பதை அரசாங்கம் அறியுமா ? நம்முடைய மாநிலத்திற்குத் தனியாக அத்தகைய சர்வே இலாகா ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது ஒரு ஆலோசனை. கேள்வி அல்ல. அவ்வளவுதான் சொல்லமுடியும்.

SRI S. LAZAR : இதுவரைக்கும் செய்த ஆராய்ச்சியில் இருந்து எண்ணை கிடைக்கும் இடத்தைப் பற்றிப் புதிதாக ஏதாவது தகவல் கிடைத்திருக்கிறதா ? எந்த இடத்தில் ?

THE HON. SRI R. VENKATARAMAN : மூன்று நிபுணர்கள் இதைப் பற்றிப் பூர்வாங்க ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, ராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் எண்ணை இருக்கலாம் என்று ஆலோசனையில் கூறப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் இப்பொழுது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார், இந்த எண்ணை ஆராய்ச்சி செய்வதற்கு முன்னால், இப்பொழுது மாகாணம் பூராவும் மண்ணெண்ணைப் பற்றாக்குறை ஏற்பட்டு, அதன் விலை விஷம் போல் ஏறிக்கொண்டே போகிறது. இந்த எண்ணைப் பற்றாக்குறையைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எண்ணை கிடைக்கும் புதிய பகுதிகளைக் கண்டுபிடித்து இப்பொழுது ஏற்பட்டிருக்கும் எண்ணைப் பற்றாக்குறையைத் தீர்க்க வேண்டுமானால் அடுத்த தலைமுறையில்தான் முடியும்.

SRI A. GOVINDASAMY : தஞ்சையிலும், தென்னாற்காடு மாவட்டத்திலும் எந்தப் பகுதியில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : தென்னாற்காடு மாவட்டத்தில், வானூர் பகுதியில்.

5th February 1959]

SRI T. T. DANIEL : May I know whether the survey is made in all the districts in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்தெந்த இடங்களில் எண்ணெய் இருக்கிறது என்று பூர்வாங்க ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்படுகிறதோ, அந்த இடங்களில் இந்த ஆராய்ச்சி நடக்கும்.

SRI A. VEDARATHNAM : எண்ணெய் இருப்பதாக இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற இடத்தில் எத்தனை அடி ஆழத்தில் அந்த எண்ணெய் அகப்படுகிறது? அந்த எண்ணெயை எடுப்பதற்கான முயற்சி என்ன எடுக்கப் பட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : Oil has not been discovered. Preliminary investigations show that there may be possibilities of oil in certain areas. In fact, the survey is only an aeromagnetic survey and no oil has yet been struck. The State would be happy if oil is struck.

SRI T. SAMPATH : தஞ்சாவூர் ஜில்லாவில் எந்தப் பகுதியில் எண்ணெய் இருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : On the Cauvery Basin, on the East Coast and under the sea.

SRI A. A. RASHEED : Will the Government allow private parties to do the preliminary survey?

THE HON. SRI R. VENKATARAMAN : I am yet to hear of any private party in India who has ventured to suggest it.

Industrial training to persons belonging to Scheduled Castes

* 9 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any scheme to give industrial training to persons belonging to Scheduled Castes; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Six Harijans are proposed to be given training for eight months in each of the eleven departmental service centres in different industries like carpentry, blacksmithy, lock making, etc., on payment of stipend of Rs. 30 per mensem each. In addition there is the usual reservation of seats up to 16 per cent for Scheduled Castes and Scheduled Tribes students for admission in the industrial institutes and centres to undergo training in technical and vocational trades and those students are eligible for full fee concessions both in the Government and the private institutions.

SRI K. SATTANATHA KARAYALAR : அடுத்த மாகாணங்களுக்கு பயிற்சிக்காக யாராவது அனுப்பப்பட்டிருக்கிறார்களா?

THE HON. SRI P. KAKKAN : தனியாக கேள்வி போட்டால் நல்லது.